சுருக்கம்

பள்ளிக்கல்வி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழுள்ள மாநில, மாவட்ட, திட்ட அலுவலகங்கள், வட்டார மற்றும் குறுவள மையங்களில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்கள் – பணிமாறுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி[ப.க.5(1)]த் துறை

அரசாணை (1டி) எண்.134 — நாள் 18.08.2021

(திருவள்ளுவராண்டு 2052,
பிலவ வருடம் , ஆவணி 2)

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (1டி) எண்.218 பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை, நாள் 20.06.2019.
2. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.27085/2019 மற்றும் W.M.P.No.26455/2019-ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை நாள் 30.09.2019 .
3. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநரின் கடித ந.க. எண்.1614/ஆ7/ஆப/ஒபக/2021, நாள் 11.08.2021 .

*********

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 2019–2020–ஆம் கல்வி ஆண்டில் பொது மாறுதல் கலந்தாய்வில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் வகுத்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்பான பணிமாறுதல் தொடர்பான நெறிமுறைகள் தனியே வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்பான பணிமாறுதல் தொடர்பான உரிய நெறிமுறைகள் பிறப்பிக்குமாறு திரு.K.சம்பத் மற்றும் 6 பேர், சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண்.27085/2019-ல் வழக்கு தொடர்ந்தனர். இவ்வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் தனது 30.09.2019 நாளிட்ட தீர்ப்பாணையில் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது :-

> "7.. to frame guidelines as per clause 17 of G.O.(Ms)No.218, School Education Department, dated 20.06.2019 within a period of twelve weeks from the date of receipt of a copy of the order".

Scanned by CamScanner

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் அவர்கள் அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் பணியாற்றும் 500 ஆசிரியர் பயிற்றுநர்கள் பணிமூப்பு அடிப்படையில் 2006-2007-ஆம் ஆண்டு முதல் பல கட்டங்களாக உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக இருந்த பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு பணிமாறுதல் வழங்கப்பட்டது என தெரிவித்துள்ளார். அதே போன்று தற்பொழுது 2021-2022-ஆம் கல்வி ஆண்டில் பணிமூப்பு அடிப்படையில் 500 ஆசிரியர் பயிற்றுநர்களை (2002–2003 முதல் நியமிக்கப்பட்ட 32 ஆசிரியர் பயிற்றுநர்களும் 2005–2006–ல் நியமிக்கப்பட்ட 468 ஆசிரியர் பயிற்றுநர்களும் ஆக மொத்தம் 500 பயிற்றுநர்கள்) (தமிழ்–5, ஆங்கிலம்–67, கணிதம்–271, அறிவியல்–148 மற்றும் சமூக அறிவியல்–9) அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு பணிமூப்பு அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களாக பணியிடமாறுதல் செய்வதற்கு ஏதுவாக, அனைவருக்கும் கல்வி திட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்பான பணி மாறுதல் தொடர்பான நெறிமுறைகள் வகுத்து வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநரின் கருத்துருவினை, அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாநில, மாவட்ட திட்ட அலுவலகங்கள், வட்டார மற்றும் குறுவள மையங்களில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பணிமாறுதல் வழங்க வேண்டும் என அரசு ஆணையிடுகிறது:-

**(I). பணிமாறுதல்கள் வழங்க கீழ்க்காணும் அலகின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட வேண்டும்.**

(அ)2021-22-ஆம் கல்வி ஆண்டில் பணிமூப்பு அடிப்படையில் 500 ஆசிரியர் பயிற்றுநர்கள் (2002–2003 முதல் நியமிக்கப்பட்ட 32 ஆசிரியர் பயிற்றுநர்களும் 2005–2006–ல் நியமிக்கப்பட்ட 468 ஆசிரியர் பயிற்றுநர்களும் ஆக மொத்தம் 500 பயிற்றுநர்கள்) (தமிழ்–5, ஆங்கிலம்–67, கணிதம்–271, அறிவியல்–148 மற்றும் சமூக அறிவியல்–9) அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு பணிமூப்பு அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களாக பணியிடமாறுதல் செய்திடல் வேண்டும். தற்போது தேர்வு செய்யப்படும் பணியில் மூத்த 500 ஆசிரியர் பயிற்றுநர்கள் பணிமாறுதலுக்கு விருப்பமின்மை தெரிவித்து பணியில் தொடரக்கோரினால் அதனை அனுமதிக்க தேவையில்லை. இதை போல் ஒவ்வொரு ஆண்டும் பணியில் மூத்த 500 ஆசிரியர் பயிற்றுநர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக பணி மாறுதல் செய்தல் வேண்டும்.

(ஆ)அரசாணை (நிலை) எண்.96, பள்ளிக் கல்வி (SSA)த் துறை, நாள் 08.07.2014–இல் ஆசிரியர் பயிற்றுநர்கள் மாநிலத் திட்ட அலுவலகம், மாவட்ட திட்ட அலுவலகம், வட்டார வளமைய பொறுப்பு அலுவலர்கள் மற்றும் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் தேவையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டனர். 2014 ஆம் ஆண்டிற்குப்பின் பட்டதாரி ஆசிரியர்களாக பணி மாறுதல் செய்யப்பட்ட மற்றும் மேல்நிலைக்கல்வி பள்ளிகளுக்கு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களாக பதவி உயர்வு மூலம் பணிமாறுதல்கள் செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்றுநர்கள் 887 பேர் போக,

Scanned by CamScanner

இன்றைய நிலையில் 3700 பேர் பணியில் உள்ளனர். இன்றைய நிலையில் பணியில் உள்ள 3700 ஆசிரியர் பயிற்றுநர்கள் கீழ்க்காணுமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ.எண் | பதவி | பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | பட்டதாரி ஆசிரியர்களாகப் பணிமாறுதல் | 500 |
| 2 | மாநில திட்ட இயக்ககம் | 10 |
| 3 | மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்கள் | 232 |
| 4 | ஆசிரியர் பயிற்றுநர்கள் (45898 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளைப் பார்வையிட சராசரியாக ஓர் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு 16-18 பள்ளிகள்) | 2958 |
| | மொத்தம் | 3700 |

(இ). வட்டார வளமைய அளவில் உள்ள 2958 பணி இடங்களை ஒவ்வொரு வட்டாரத்தில் உள்ள அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளின் எண்ணிக்கை, ஒன்றிய கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளில் (Norms) நிர்ணயித்துள்ளவாறு ஒவ்வொரு BRTE/CRTEக்கும் 18 பள்ளிகளுக்கு மிகாமல் ஒதுக்கீடு செய்தும் அப்பணி இடங்கள் 5 ஆக இருப்பின் தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்களில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒருவராகவும், 5-க்கு மேல் ஒதுக்கீடு வரும் எண்ணிக்கைக்கு கணிதம், அறிவியல், ஆங்கிலம் அல்லது அந்த ஒன்றியத்தில் மாநில தேசிய ஆய்வுகளில் பின்தங்கியுள்ள பாடத்திலும் ஆசிரியப் பயிற்றுநர்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஒன்றியத்திலும் பணியில் மூத்த ஆசிரியர் பயிற்றுநர்கள் வட்டார வளமைய பொறுப்பு அலுவலராக செயல்பட வேண்டும். பணிமூப்பு உடையவர் அப்பொறுப்பினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும். பொறுப்பு அலுவலர் அலுவலக பொறுப்பினையும் இணைத்து செய்ய வேண்டிய நிலையில் இவ்வலுவலருக்கு 10 பள்ளிகள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஈ). அரசாணை (நிலை) எண்.96, பள்ளிக் கல்வி (SSA)த் துறை, நாள் 08.07.2014-ன்படி 2014-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்களில் பணியாற்றிய 1387 (887+500) ஆசிரியர் பயிற்றுநர்களில் பள்ளிக் கல்வித் துறைக்கு பணிமாறுதலில் மற்றும் பணி உயர்வில் சென்றுள்ளனர். இப்பணியிடங்களில் பாடவாரியாக/ வட்டார அளவில் தேவையை கணக்கிட்டு தகுதி உள்ள 500 பட்டதாரி ஆசிரியர்களை பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதே போல் ஒவ்வொரு ஆண்டும் பட்டதாரி ஆசிரியர்களாக பணி மாறுதல் செய்யப்படும், பணி இடங்களுக்கு பாடவாரியாக, திறமையும் அனுபவமும் சேவை மனப்பான்மையும் உள்ள ஆசிரியர்களை பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

Scanned by CamScanner

(உ) ஆசிரியர் பயிற்றுநர்களின் பணியிட மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படும் நாளில் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான அனைத்துப் பணியிடங்களும் (மாநில திட்ட இயக்ககம், மாவட்ட திட்ட அலுவலகம், வட்டார வளமையம்) காலிப் பணியிடமாக (Zero Vacancy) கருதப்பட்டு பணிநியமன மூப்பின் அடிப்படையில் மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும்.

(ஊ) மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பணிமூப்பு அடிப்படையில் பாடம் சார்ந்து அல்லாமலும் பிற வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களின் பணி இடங்கள் பாட வாரியாக நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்களுக்கான கலந்தாய்வு முன்னுரிமைப் பட்டியல்படி நடத்தப்பட வேண்டும். மாவட்ட/ ஒன்றிய வாரியான இப்பணியிடங்களின் எண்ணிக்கையை கலந்தாய்வுக்கு முன்னதாக மாநில திட்ட இயக்குநர் கணக்கிட்டு பள்ளிக் கல்வி ஆணையருக்கு தெரிவித்தல் வேண்டும்.

(எ) கலந்தாய்வு நடத்தும் போது (தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல்) வட்டார அளவில் பாடவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களுக்கும் ஆசிரியர் பயிற்றுநர்களின் முன்னுரிமைப்படி கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும்.

(ஏ) 2014-2015 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற பணி நிரவல் கலந்தாய்வில் ஆசிரியர் பயிற்றுநர்கள் தாங்கள் பணிபுரியும் மாவட்டங்களான சென்னை, கடலூர், திண்டுக்கல், கரூர், மதுரை, நாமக்கல், பெரம்பலூர், சேலம், தேனி, திருச்சி, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலிருந்து வேறு மாவட்டங்களுக்கு சென்ற 395 ஆசிரியர் பயிற்றுநர்களில் தற்போது பணியில் இருக்கும் 362 ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு இக்கலந்தாய்வில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(ஐ) ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான கலந்தாய்வு 2021-2022-ஆம் கல்வியாண்டில் ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வுக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும்.

II. சிறப்பு நிகழ்வு:

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின்கீழ் பணிபுரியும் ஆசிரியப் பயிற்றுநர்களுள், 01.06.2020-க்கு பின்னர் கணவன் அல்லது மனைவி திடீரென்று விபத்திலோ அல்லது மீளா நோய்வாய்ப்பட்டோ இறந்திருந்தால், அத்தகைய ஆசிரியப் பயிற்றுநர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்தாய்வு குறித்த விதிமுறைகளுக்கு விலக்களித்து சிறப்பு நிகழ்வாக கருதி அவர்கள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் அளவில் மாறுதல் ஆணை வழங்கப்படலாம். அவ்வாறு வழங்கப்பட்ட நிகழ்வுகள் தொடர்பான ஒட்டு மொத்த அறிக்கையினை பள்ளிக் கல்வி ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

Scanned by CamScanner

III. ஒரு பணியிடத்திற்கு ஒருவருக்கு மேல் மாறுதல் கோரினால் கீழ்க்காணும் நெறிமுறைகளைக் கையாண்டு முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் பணி மாறுதல் ஆணை வழங்க வேண்டும்:-

i. முற்றிலும் கண்பார்வையற்ற (Total Blindness) ஆசிரியப் பயிற்றுநர்கள்
ii. 40% மற்றும் அதற்கு மேல் ஊனமுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள்.
iii. மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகள் உள்ள பெற்றோர் மற்றும் பெற்றோரை இழந்த மனவளர்ச்சி குன்றிய / மாற்றுத் திறனாளி குழந்தைகளின் சட்ட ரீதியான பாதுகாவலர் (Legal Guardian) ஆசிரியப் பயிற்றுநர்களாக இருப்பவர்கள். (அவ்வாறு உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகள் மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995-ன்படி 40% மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட நலவாழ்வு அலுவலரால் (District Differently abled Welfare Officer) சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.)
iv. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை (Kidney Transplantation Surgery) செய்தவர்கள் மற்றும் டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள்.
v. இருதய அறுவை சிகிச்சை மற்றும் மூளைக்கட்டி (Brain Tumor) அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்.
vi. கடுமையாக பாதிக்கப்பட்ட புற்று நோயாளிகள்.
vii. 01.06.2021 அன்றைய நிலவரப்படி ஆசிரியர் பயிற்றுநர்களாகப் பணிபுரியும் இராணுவ வீரரின் மனைவி.
viii. விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதிர்கன்னியர்.
ix. 2014ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வெளி மாவட்டங்களுக்கு பணிநிரவலில் (Deployment) சென்றவர்கள்.
x. கணவன், மனைவி இருவரும் பணியில் இருப்பவர்கள் எனில், தற்போது கணவர் பணிபுரியும் இடத்திலிருந்து மனைவி பணிபுரியும் இடமும் அல்லது மனைவி பணிபுரியும் இடத்திலிருந்து கணவர் பணிபுரியும் இடமும் 30கி.மீ. சுற்றளவுக்கும் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அவர்களை தனித்தனியே வசிப்பதாக கருதி கணவன் / மனைவி பணிபுரிபவர்கள் (Spouse Employee) என்ற அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். கணவன், மனைவி என்ற முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் கோரும் பணியிடமானது, கணவன் அல்லது மனைவி பணிபுரியும் மாவட்டத்தில் உள்ள பணியிடங்களுக்கு மட்டுமே பொருந்தும். கணவன் / மனைவி என்ற முன்னுரிமை மைய அரசு, மாநில அரசு அலுவலகங்கள், பள்ளிகள் / அரசு சார்ந்த அலுவலகங்கள், அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அதற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட உரிய அலுவலர்களால் பணி சான்று வழங்கப்பட வேண்டும். இதில் ஒன்றிய அரசு / மாநில அரசு / பொதுத் துறை என்ற பாகுபாடு கிடையாது.
xi. மேற்குறிப்பிட்ட முன்னுரிமை இல்லாத இதர ஆசிரியப் பயிற்றுநர்கள்.

Scanned by CamScanner

**IV.** மாறுதல் கலந்தாய்வு **(Transfer Counseling)** முறையில் ஆசிரியப் பயிற்றுநர்கள் மாறுதலின் போது கீழ்க்காணும் நிபந்தனைகளையும் அலுவலர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்:-

(i) மாறுதல் கோரும் ஆசிரியப் பயிற்றுநர்கள், மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள உரிய விண்ணபத்தில் முறையாகப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். முன்னுரிமை (Priority) கோரும் ஆசிரியப் பயிற்றுநர்கள் அதற்கான சான்றிதழினை உரிய அலுவலரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும். மேலே வ.எண்.III–ல் பத்தி எண்.xi-ன்படி முன்னுரிமை கோரும் ஆசிரியப் பயிற்றுநர்கள் தற்போது பணிபுரியும் மாவட்டத்தின் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து உரிய சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

(ii) மாறுதல் கோரிப் பெறப்படும் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் முன்னுரிமைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கலந்தாய்வு நடைபெறுதல் வேண்டும்.

(iii) எந்த முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் வழங்கப்பட்டது என்பது குறித்த விவரம் மாறுதல் ஆணையில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள், மாறுதல் கலந்தாய்விற்காக விண்ணப்பித்தல் ஆகியன குறித்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் உள்ளூர் செய்தித் தாள்களில் அறிவிப்பாக வெளியிட வேண்டும். கலந்தாய்வு நடத்துவதற்கு அனைத்து வகை முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

(v) மாறுதல் கோருவது சார்ந்த விண்ணப்பங்கள் பெறுவது தொடர்பான அறிவுரைகள் பள்ளிக் கல்வி ஆணையரால் தனியாக வழங்கப்பட வேண்டும்.

(vi) ஆசிரியப் பயிற்றுநர் எவரேனும் துறை ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு குற்றச்சாட்டு நிரூபணம் ஆனாலோ அல்லது துறை ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தாலோ, அன்னார் ஏற்கனவே பணியாற்றிய இடங்களைத் தேர்வு செய்ய அனுமதிக்கக் கூடாது. மேலும், புகாரின் அடிப்படையில் நிர்வாக காரணங்களுக்காக மாறுதல் செய்யப்பட்டவர்கள் கலந்தாய்வில் ஏற்கெனவே பணியாற்றிய இடங்களை தேர்வு செய்ய அனுமதிக்கக் கூடாது.

(vii) ஆசிரியப் பயிற்றுநர்களுக்கான பணியிட மாறுதல்கள், மாறுதல் கலந்தாய்வு (Transfer Counseling) முறையில் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றப்படி மாறுதல் செய்யப்படுவதால், மாறுதல் பயணப்படி வழங்கப்படமாட்டாது.

Scanned by CamScanner

(viii) அனைத்து மாறுதல் கலந்தாய்வுகளும் கல்வித் தகவல் மேலாண்மை (EMIS) இணையதளம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆசிரியப் பயிற்றுநர்களின் பணிமாறுதல் EMIS இணையதளம் மூலம் நடத்தப்பட வேண்டும். எனவே, ஆசிரியப் பயிற்றுநர்களின் சுய விவரங்களை (BRTEs Profile) EMIS இணையதளத்தில் அந்தந்த மாவட்ட உதவி திட்ட அலுவலரின் நேரடி கண்காணிப்பில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். அவ்வாறு பதிவேற்றம் செய்யப்படும் விவரங்கள் சார்ந்த ஆசிரியப் பயிற்றுநரின் பணிப்பதிவேட்டின் அடிப்படையில் விவரங்கள் மிகத் துல்லியமாக EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவேண்டும். மேலும், பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்களின் உண்மைத் தன்மையை மாவட்ட உதவி திட்ட அலுவலர்கள் (APOs) மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் (CEOs) உறுதி செய்தல் வேண்டும்.

5. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் கீழ் பணியாற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு மேற்படி நெறிமுறைகளின் அடிப்படையில் பணிமாறுதல் கலந்தாய்வு நடத்திடவும் மற்றும் இது குறித்து கள அலுவலர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கவும் பள்ளிக் கல்வி ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை–6.
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6.

நகல்:–

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலைத் தனிச்செயலர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் (வரவு–செலவு, அநமு, பக3 ) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner